பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க. எண் 014598/பிசி/ 2020, நாள் 16.03.2020

பொருள் : பள்ளிக் கல்வி – அனைத்து மாவட்டங்கள் – அனைத்து வகைப் பள்ளிகள் அனைத்து அரசு /அரசு உதவி பெறும் /மாநகராட்சி/தனியார் பள்ளிகள் – 17.03.2020 முதல் 31.03.2020 வரை விடுமுறை அளித்தல் – சார்ந்து.

பார்வை : 1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செ.கு.எண்:031 நாள் 16.03.2020

... ... ...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செ.கு.எண்:031 நாள் 16.03.2020–ல் தமிழகத்திலுள்ள அனைத்து வகைப் அரசு /அரசு உதவி பெறும் /மாநகராட்சி/தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கொரோனா வைரஸ் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 17.03.2020 முதல் 31.03.2020 வரை விடுமுறை அளிக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

எனவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளுக்கும் 17.03.2020 முதல் 31.03.2020 வரை விடுமுறை அளிக்க அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. அரசுத் தேர்வுகள் 10 முதல் 12ஆம் வகுப்பு வரை (செயல்முறைத் தேர்வுகள் உட்பட ) திட்டமிட்டபடி நடைபெறும் இத்தேர்வுகள் முடியும்வரை தேர்வு எழுதும் மாணவர்களுக்காக மட்டும் விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகள் தொடர்ந்து இயங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு கொரானா வைரஸ் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு சுகாதாரமாக இருக்க அறிவுறுத்துமாறும் மேலும் மாணவர்கள் தங்கள் கைகளை உரிய கிருமிநாசினியை/சோப்பு கொண்டு அவ்வப்போது தூய்மைப்படுத்திக்கொள்ள அறிவுறுத்துமாறும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் சுற்றுலாச் செல்ல வாய்ப்பு இருப்பதாகக் கருதி வெளியில் சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கோயில்கள் தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்குமாறும் பெற்றோர்க்கு தெரிவிக்கப்டுகிறது.

பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பிற மாநிலங்களுக்கு பயணிப்பதையும் பொது இடங்களில் அதிக அளவில் மக்கள் கூடும் குறிப்பாக வழிப்பாட்டுத் தலங்கள், கடற்கரை, வணிக மையங்கள், திருமணங்கள் மற்றும் இதர சமூக விழாக்கள், விருந்துகள் தவிர்க்குமாறும், தனி மனித சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்குமாறும் பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மாணவர்கள் வீட்டிற்குள் நுழையும்போது

அவ்வப்போது கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை பெற்றோர்கள் உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கைகளை சுத்தம் செய்யாமல் முகத்தை தொட வேண்டாம் எனவும் தங்கள் குழந்தைகள் விடுமுறை நாட்களின்போது குழுவாக விளையாடதவாறு கண்காணிக்கவும் பெற்றோர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சளி, இருமல் காய்ச்சல் உள்ளவர்கள் அலுவலகம்/ பள்ளிக்குச் செல்வதை தவிர்க்கவும், கொரோனா நோய் அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையை அணுகி உரிய சோதனை மேற்கொண்டு சிகிச்சை எடுத்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் சம்பந்தமாக தெரிந்து கொள்ள சுகாதாரத் துறையின் 24 மணிநேர கட்டுப்பாட்டு அறை எண்கள் 104, 044–29510400, 044–29510500, 9444340496 மற்றும் 8754448477 தெடர்புகொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், இது சார்ந்து எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அறிக்கை அனுப்புமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

16.03.20

**பள்ளிக் கல்வி ஆணையர்**

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை – 9 – தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 6.
4. இயக்குநர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை – 6.
5. மண்டல அலுவலர், சி.பி.எஸ்.இ., அண்ணாநகர் மேற்கு, சென்னை – 40.

(2–5) தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.